
# தமிழகப் பழங்குடிகள்

## வரலாறு சமூகம் பண்பாடு

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் ச. அரிச்சந்திரன்

தொகுதி – 1



பதிப்பாசிரியர்

முனைவர் ஆ. சரவணன்

# தமிழகப் பழங்குடிகள்; வரலாறு சமூகம் பண்பாடு

**(தேசியக் கருத்தரங்கம்)**

முதன்மைப் பதிப்பாசிரியர் : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
பதிப்பாசிரியர் : **முனைவர் ஆ. சரவணன்**
பதிப்புரிமை : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018
வெளியீடு : **தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641 029.
கணினியாக்கம் : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.
அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017
பக்கங்கள் : XXVI + 432 = 458
விலை : உரூ. 400/-

**ISBN : 978 - 93 - 80800 - 89 - 9**

## Tribes of Tamil Nadu ; History Society and Culture

Chief Editor : **Dr. S. Arichandran**
Editor : **Dr. A. Saravanan**
Copyright's : **Dr. S. Arichandran**
First Edition : August, 2018
Published : **Department of Tamil (SF)**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.
Computer : **Prdag Print**, Coimbatore - 29.
Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017
Pages : XXVI + 432 = 458
Prize : **Rs. 400/-**

# பொருளடக்கம்

1. பண்பாட்டு மீட்டுருவாக்கத்தில் பழங்குடிகள் 1
முனைவர் பக்தவத்சல பாரதி

2. பழங்குடியினர் பண்பாடு 13
ந. நஞ்சப்பன்

3. தென்னிந்தியப் பழங்குடிகள் குறித்த சில கருத்தாக்கங்கள் 36
முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன்

4. தமிழக இருளர் பழங்குடியினரின் மாசி மக முழுநிலவு நாள் கூடுகை ஒரு சமூக - மானிடவியல் பார்வை 43
முனைவர் சி. மகேசுவரன்

5. இருளர்களின் சடங்குகளில் நாடக நிகழ்த்துக் கூறுகள் (கோத்தகிரி வட்டார இருளர்களின் சடங்குகளை முன்வைத்து) 60
முனைவர் ராம்ராஜ்

6. கிழக்கு கடற்கரைப் பகுதி இருளர்களின் மொழி மற்றும் பண்பாட்டுப் பதிவுகள் 66
முனைவர் ப. குமரேசன்

7. பாலமலை குஞ்சூர்பதி இருளர் மக்களின் வாழ்வியல் சடங்கு முறைகள் 72
முனைவர் க. பழனிவேல்

8. அட்டுக்கல் இருளர் பழங்குடி மக்களின் மருத்துவமுறை 77
முனைவர் எம்.ஏ. சிவராமன்

9. இருளர் பழங்குடி மக்களின் மருத்துவ முறைகள் 82
முனைவர் பூ.மு. அன்புசிவா

10. Ethnomedicinal Plants Used by the Irula Tribes of Maruthamalai Hills, Western Ghats of India 93
**A. Venkatachalapathi and S. Paulsamy**

11. தவறிய மரபுகளும் உடற்கூறு மாற்றங்களும் அட்டப்பாடி இருளர் பற்றிய அரிய பதிவுகள் 105
முனைவர் மு. நாகராஜன்

# 7. பாலமலை குஞ்சூர்பதி இருளர் மக்களின் வாழ்வியல் சடங்குமுறைகள்

முனைவர் க. பழனிவேல்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641029.

## முன்னுரை

மனித இனத்தின் தோற்றம் குறித்த பதிவுகளை எடுத்துப் பார்த்தோமேயானால் அதில் மலைகளுக்கு நிலைத்த இடமுண்டு. ஆதி மனிதன் வாழ்ந்ததற்கான சான்றுகள் மற்ற இடங்களைக் காட்டிலும் மலைப்பகுதிகளில்தான் மிகுதியாகக் கிடைத்துள்ளதாக மானிடவியல் மற்றும் தொல்லியல் அறிஞர்கள் உரைத்துள்ளனர். அத்தகு மலைகள் பழங்கால மனிதர்களைச் சுமந்ததைப் போன்று அவர்களின் பண்பாட்டு எச்சங்களையும் தாங்கி வந்துள்ளது. மூதாதையர்களின் மரபுகளைக் காக்கும் மலைவாழ் பழங்குடியின மக்கள் அவர்களின் பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து கடைபிடித்து வருவதற்கு இந்த மலைகளும் ஒரு காரணம். மலையன்னை மடியில் வாழ்ந்துவரும் மலைவாழ் மக்களே இன்று தொல்குடிகளின் வாரிசுகளாகவும் மரபுகளின் பாதுகாவலர்களாவும் விளங்கி வருகின்றனர். அத்தகைய சிறப்புமிக்க மலைவாழ் மக்களில், கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியினையடுத்துள்ள நாயக்கன் பாளையம் அஞ்சலுக்குட்பட்ட பாலமலை குஞ்சூர்பதி இருளர் இன மலைவாழ் மக்களின் வாழ்வியல் சடங்குமுறைகள் பற்றிய செய்திகளைப் பதிவுசெய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இருப்பிடமும் மக்களும்

கோயம்புத்தூரையடுத்துள்ள பெரியநாயக்கன்பாளையத்திலிருந்து மேற்கு திசை நோக்கிப் பயணித்தால் கோவனூர் ஊராட்சி. அதனையடுத்து மேற்கு நோக்கி 4 கிலோமீட்டர் தூரம் பயணித்தால் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரம் வரும். அங்கிருந்து மலைமீது சுமார் 2 கிலோமீட்டர் தூரம் கடினமான வளைவுகளைக் கடந்து பயணித்தால் பெரும்பதி கிராமம் வருகிறது. இக்கிராமம் பாலமலை அரங்கநாதர் கோயிலுக்கருகில் உள்ளது. இதனைக் கடந்து சென்றால் குஞ்சூர்பதி கிராமம் வருகிறது. சுற்றிலும் மலைகள் சூழப்பட்டு மொத்தமே 40 வீடுகளையும் அரசு உண்டி உறைவிடப் பள்ளியையும் மற்றும் ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் உள்ளடக்கியதாக இக்கிராமம் உள்ளது. இக்கிராமத்தினைப் போன்று பாலமலையில் மொத்தம் 6 கிராமங்கள் உள்ளன.